


இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 17.06.2026


# நேற்று மட்டும் எத்தனை கொடூரங்கள்?

நேற்று ( ஜூன் 16) ஒரே நாளில் மட்டும் எத்தனை கொடுமைகள் நடந்துள்ளது தெரியுமா?

* கும்மிடிப்பூண்டியில் மூன்று வயதுக் குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது.

* தாம்பரத்தில் பத்து வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளார்.

* திருவள்ளூரில் ஏழு வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்.

* சென்னையில் 12 வயது சிறுமி பாலியல் தொல்லைக்கு ஆளாகி இருக்கிறார்.

* பூந்தமல்லியில் ஏழு வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு உள்ளார்.

* கோயம்பேட்டில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை தரப்பட்டுள்ளது. அந்தப் பெண் கூச்சலிட்டதால் மர்ம நபர் ஓட்டம் பிடித்துள்ளார்.

* திருவண்ணாமலையில் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார் த.வெ.க. நிர்வாகி யோகேஸ்வரன். பொது மக்கள் பிடித்து அவரை அடித்து உதைத்துள்ளார்கள்.

* பெரம்பூரில் சாலையில் நடந்து சென்ற பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முகேஷ் என்பவரை பொதுமக்கள் பிடித்து போலீசில் ஒப்படைத்துள்ளார்கள்.

**இதுதான் விஜய் ஆளும் தமிழ்நாட்டின் இன்றைய நிலைமை? சட்டம் இருக்கிறதா? போலீஸ் இருக்கிறதா? முதலமைச்சர் என்ற ஒருவர் இருக்கிறாரா? ஆட்சி என்ற ஒன்று நடக்கிறதா? இதுதான் தமிழ்நாட்டு மக்கள் மனங்களில் எழுந்துள்ள கேள்வி ஆகும்.**

இவர்கள் அழுகுரல் விஜய்க்கு கேட்கவில்லையா? மரண ஓலம் விஜய் காதில் விழவில்லையா? ‘உங்களுக்கு ஒண்ணு என்றால் இந்த விஜய் வருவான்’ என்ற சினிமா டயலாக், சிரிப்பு டயலாக் ஆகிவிட்டதே? விஜய் வரவில்லை. ஒன்று மூடிய வீட்டுக்குள் இருந்து விடுகிறார். அல்லது மூடிய தலைமைச் செயலகத்துக்குள் அடைந்து கொள்கிறார். அவ்வளவுதான்.

பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் இந்த ஆட்சியும் த.வெ.க. கட்சியும் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. கும்மிடிப்பூண்டியில் மூன்று வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். குழந்தையிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட நபரை பொதுமக்கள் பிடித்து போலீஸில் ஒப்படைத்துள்ளார்கள். பிபின் மஞ்சி என்ற அந்த நபருடன் மூன்று பேர் சேர்ந்து அழைத்துச் சென்றுள்ளார்கள். மற்ற மூவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. இதனைக் கண்டித்து கொந்தளித்துப் போய் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டம் செய்கிறார்கள். அவர்களிடம் வந்து வாக்குவாதம் செய்கிறார் கும்பிடிப்பூண்டி த.வெ.க. எம்.எல்.ஏ.வான விஜயகுமார். மக்கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

குழந்தையின் பெற்றோருக்கு உதவச் சென்ற மாதர் சங்கத்தினரை அவர்கள் பக்கத்தில் காவல்துறை அனுமதிக்கவில்லை. மருத்துவ மனை பிணவறை வாசலில் விஜய் படத்தோடு பத்து பேர் அனைவரையும் மிரட்டும் வகையில் நின்றுள்ளார்கள். ஒரே ஒரு பெண் காவலர் மட்டும் அந்த இடத்துக்கு வந்துள்ளார். இதுதான் சிங்கப்படை செய்யும் செயலா? அவ்வளவுதான் அவர்களுக்கு தரப்பட்ட டூட்டியா?

கும்மிடிப்பூண்டியில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்குப் பின் அந்த பெற்றோரின் விருப்பப்படி கும்மிடிப்பூண்டிக்கு கொண்டு செல்ல விடவில்லை. சென்னை மூலக்கொத்தளத்திலேயே அடக்கம் செய்ய காவல் துறை கட்டாயப்படுத்தியது ஏன்?

**என்ன செய்கிறது விஜய்யின் சிங்கப் பெண் படை? அது படையல்ல ரோந்து செய்பவர்கள். அவர்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. உடுப்பில் நிறத்தை மாற்றி இருக்கிறார் முதலமைச்சர் விஜய். அவ்வளவு தான்.**

மதுரையில் ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்து வீடியோ எடுத்து மிரட்டி இருக்கிறது ஒரு கும்பல். சிங்கப் பெண் படைக்கு புகார் அளித்தும் அந்த தொழில் அதிபர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கதறுகிறார் பாதிக்கப்பட்ட பெண். இதற்குத்தானா சிங்கப்பெண் படை உருவாக்கப்பட்டது?

**இன்னமும் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் மீது விஜய் நடவடிக்கை எடுக்கவில்லை. தனது ரசிகையை தனது கட்சிக்காரர்களே சீரழித்துள்ளார்கள், அதற்கு உடந்தையாக ஒரு சட்டமன்ற உறுப்பினரே இருந்துள்ளார். அந்த சட்டமன்ற உறுப்பினரை பதவி நீக்கம் செய்துவிட்டு கைது செய்திருக்க வேண்டாமா விஜய்? ஏன் செய்யவில்லை? செய்தால் விஜய் நாற்காலியே விழுந்து போகும். ஒரு வோட்டில்தான் அவர் ஆட்சியே ஆடிக் கொண்டு நிற்கிறது. தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள சரவணனைக் காப்பாற்றுகிறார் விஜய். ‘ஆளைச் சொல்லு ரூல்ஸை சொல்றேன்’ என்பார்களே. அப்படி நடந்து கொள்கிறார் முதலமைச்சர் விஜய்.**

நாட்டில் நடந்த சம்பவங்களுக்கு வாயைத் திறந்து பேசி இருக்கிறாரா விஜய்? ‘வாயில் என்னமோ வருது..’ என்றாரே? **இப்போது வாயில் இருந்து எதுவும் வராதா?**

இவரை ஆறு மாதம் வரை விமர்சிக்காமல் எப்படி இருக்க முடியும்? ஆறு மாதத்துக்குள் எத்தனை பாலியல் வன்கொடுமைகளைப் பார்க்க வேண்டும்? கொலை, கொள்ளைகளைப் பார்க்க வேண்டும்? அரிவாள் வெட்டுகள், பெட்ரோல் குண்டு வீச்சுகளைப் பார்க்க வேண்டும்?

**விஜய் ஆட்சி நீடித்தால் நாடு தாங்காது என்கிற நிலைமையைத்தான் நாம் கண்ணுக்கு முன்னால் பார்க்கிறோம்.**

●●

# ஈவு, இரக்கமற்ற த.வெ.க. காட்டாட்சி வீழ்வது உறுதி!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

**சென்னை, ஜூன் 17 -**

**த.வெ.க. ஒரு ஈவு, இரக்கமற்ற காட்டாட்சி. அது வீழ்வது உறுதி என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தமிழ்நாட்டில் அதிகரித்து வருவது தொடர்பாகவும் அதிலும் குறிப்பாக நேற்று முன்தினம் (திங்கள்) ஒரே நாளில் நடைபெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பாகவும் தமது சமூக வலைதளப் பக்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கீழ்க்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.**



24 மணி நேரத்தில் 12 பாலியல் வன்கொடுமைகள் நடந்திருக்கின்றன.

நீங்கள் appoint செய்ததாக சொன்ன efficient officers என்ன செய்கிறார்கள் முதலமைச்சர் அவர்களே?

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உயிரிழந்த குழந்தைகளைப் பெற்றவர்களுக்குத் தெரியாமலேயே வேறு இடத்தில் அடக்கம் செய்யும் அளவுக்கு **நீங்கள் நடத்தும் ஈவு, இரக்கமற்ற காட்டாட்சி வீழ்வது உறுதி!**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு நா.வீராசாமியின் பேரன் –

# டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே.சித்தார்த் மணவிழா! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

### மாவட்டச் செயலாளர்கள் – முன்னாள் அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

**சென்னை, ஜூன் 17 -**

**முன்னாள் கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி அவர்களின் பேரன் - டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி.யின் புதல்வர் வி.கே.சித்தார்த்தின் திருமணம் இன்று (ஜூன் 17 - புதன்கிழமை) சென்னையில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும் நடைபெறுகிறது.**

**கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.**

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

முன்னாள் கழகப் பொருளாளரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான ஆர்க்காடு நா.வீராசாமி - திருமதி. கஸ்தூரி வீராசாமி ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் - கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி - டாக்டர் ஜெயந்தி கலாநிதி ஆகியோரின் புதல்வருமான



வி.கே.சித்தார்த்திற்கும் - சென்னை வாழ் ராமசுப்ரமணியன் சுந்தர் - திருமதி. வித்யா ஸ்ரீசுந்தர் ஆகியோரின் மகளான எஸ்.ஆஷ்ரயா காயத்ரிக்கும் திருமண விழா, இன்று (17.6.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் சென்னை - வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழாவில் - மாவட்டக் கழகச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், மாதவரம் எஸ்.சுதர்சனம், ஆர்.டி. சேகர், நே.சிற்றரசு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் - மணவிழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மணவிழாவிற்குத் தலைமையேற்று, மணவிழாவினை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என். நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி என். சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., மு.பெ.சாமிநாதன், அந்தியூர் ப.செல்வராஜ், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன்,

மாவட்டக் கழகச் செயலாளர் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ,, மயிலை த.வேலு, தா.மோ.அன்பரசன், கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., திருமதி பி.கீதா ஜீவன் உள்ளிட்ட கழக மாவட்டச் செயலாளர்களும், முன்னாள் அமைச்சர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களும்,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர்.பத்மநாபன், பொன் தனபால் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. நன்றி கூறுகிறார்.

## பாலியல் வன்கொடுமை செய்து 3 வயது குழந்தை கொலை!

# தமிழ்நாட்டில் பெண்கள் - குழந்தைகளுக்கு பாதுகாப்பு எங்கே?

## அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 17 -

கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

**கனிமொழி எம்.பி. (தி.மு.க. துணை பொதுச்செயலாளர்):** கும்மிடிப்பூண்டியில் சமூகவிரோதிகளால் மூன்று வயது குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, முட்புதரில் வீசப்பட்ட செய்தி அறிந்து மனம் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. பெண்கள் அனைவரும் தங்களையும், தங்கள் குழந்தைகளையும் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அரசு என எதுவும் உள்ளதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு, இந்த மாநிலத்தில் ஒரு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ‘பொறுப்பு’ என்னும் சொல்லுக்குப் பொருள் தெரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில், பொதுமக்களே தங்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?. தூத்துக்குடி ஆனந்த நகர் பகுதியில் உள்ள தேவாலயத்தில் போதகரால் 12 வயது சிறுமி பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் எங்கும் பாதுகாப்பில்லை என்னும் சூழல் தமிழ்நாட்டில் உருவாகியுள்ள நிலையில், தொடர்பு கொள்ள தனியாக உதவி எண் கூட இல்லாத ஒரு ‘சிறப்பு படை’யை உருவாக்கி விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது இந்த த.வெ.க. அரசு. எந்த ஒரு சிறப்பு அதிகாரமும் இல்லாத ‘சிறப்பு படை’ இருந்து என்ன பயன்?.

**ராமதாஸ் (பா.ம.க. நிறுவனர்):** கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது பெண் குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது. இந்த கொடூரச் செயலில் பாதிக்கப்பட்ட குழந்தையின் குடும்பத்திற்கு தமிழக அரசு உடனடியாக உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மேலும், இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் மீது விரைவான விசாரணை நடத்தி, சட்டத்தின் கீழ் மிகக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது கவலைக்குரியது.

**பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் மாநில செயலாளர்):** கும்மிடிப்பூண்டி பகுதியில் மூன்று வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு முட்புதருக்குள் வீசப்பட்டு அச்சிறுமி உயிரிழந்துள்ளதும், பூந்தமல்லியில் 7 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு சுடுகாட்டில் வீசப்பட்டுள்ளதும் தமிழகத்தையே உலுக்கியுள்ளது. காவல்துறை தீர விசாரித்து குற்றமிழைத்த அனைவரையும் கைது செய்திடவும், உரிய வழக்குப்பதிவு செய்து விரைந்து நடவடிக்கை எடுக்கவும், காவல்துறை ரோந்து, சி.சி.டி.வி. கேமிராக்கள் போன்றவற்றை வலுப்படுத்திடவும் வேண்டும்.

தமிழகத்தில் பெண்கள் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவது தொடர்கதையாக உள்ளது. இதை தடுப்பதற்கு தமிழக அரசும், காவல்துறையும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# குழந்தையின் உடலை அவசரமாக அடக்கம் செய்த போலீசார்!

## சிறுமியைக் காட்டாத காவல்துறையைக் கண்டித்து போராட்டம்!

கும்மிடிப்பூண்டி, ஜூன் 17 –

கும்மிடிப்பூண்டியில் கொலை செய்யப்பட்ட சிறுமியின் உடலை, போலீசார் அவசரம் அவசரமாக அடக்கம் செய்துவிட்டதாக குற்றம்சாட்டி, பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியை அடுத்த புதுப்பேட்டை கிராமத்தில் வசித்து வந்த ஒடிசா மாநில தம்பதியின் 3 வயது குழந்தை, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, முட்புதரில் வீசப்பட்டது. பொதுமக்கள் குழந்தையை மீட்டு கும்மிடிப்பூண்டி கோட்டக்கரை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

பின்னர், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தது. தொடர்ந்து, குழந்தையின் உடல் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நிலையில், கும்மிடிப்பூண்டி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் விஜயகுமார், குழந்தையின் பெற்றோர்களிடம் பிணவறைக்குள் சமரசம் பேசியதாக புகார்கள் எழுந்தன. இதற்கு தி.மு.க. தரப்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய வடசென்னை தி.மு.க. மகளிர் அணியைச் சேர்ந்த லட்சுமி வேலு, சிங்கப்பெண் மகளிர் பாதுகாப்பு படை எனக் கூறிய முதலமைச்சர் விஜய் எங்கே சென்றார்? என கேள்வி எழுப்பினார்.

பிரேத பரிசோதனைக்குப் பின், பொன்னேரி சுடுகாட்டில் சிறுமியின் உடலை போலீசார் அவசர அவசரமாக அடக்கம் செய்தனர்.

கும்மிடிப்பூண்டி சுடுகாட்டில் இறுதிச் சடங்குகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், பொதுமக்களை திசை திருப்பி, பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக, அவர்களை வற்புறுத்தி பொன்னேரி சுடுகாட்டில் சிறுமி உடல் அடக்கம் செய்யப்பட்டதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

மேலும், சிறுமி சடலத்தை காட்டாமல் அடக்கம் செய்த காவல் துறையைக் கண்டித்து அவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது, போராட்டத்தில் ஈடுபட்ட நபர் ஒருவர் அருகில் இருந்த மின் டவரில் ஏறி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதால் பதற்றம் ஏற்பட்டது.